பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

நல்லூர் இளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 வைகாசி 16 வெள்ளிக்கிழமை (29-05-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர் 183

## வளலாய், கதிரிப்பாய் பகுதிகளில்

# படை முன்னேறும் முயற்சி முறியடிப்பு

# வடமராட்சியில் மும்முனைத் தாக்கு!

## 10க்கும் அதிக ராணுவம் பலி
## 12 பொதுமக்கள் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், மே 29

பலாலி இராணுவ முகாமில் இருந்து வளலாய், கதிரிப்பாய் பகுதி ஊடாக அச்சுவேலி, தொண்டமனாறு பகுதியை நோக்கி நேற்று அதிகாலை முதல் மூன்று தடவைகள் முன்னேற முயன்ற இராணுவ அணிகளை விடுதலைப் புலிகள் விரட்டியடித்தனர். காலை முதல் மாலை வரை நீடித்த இந்த உக்கிர சண்டையில் பத்துக்கும் அதிகமான படையினர் உயிரிழந்தனர்,

அதேசமயம் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, ஊரிக்காடு, கெருடாவில், தொண்டமனாறுப் பகுதிகள் மீது மும்முனைத் தாக்குதல்களை நடத்தினர். இத்தாக்குதல்களில் சுமார் 12 பொதுமக்கள் உயிரிழந்தனர்; முப்பது பேர் வரை படுகாயமுற்றனர்.

வடமராட்சி மற்றும் அச்சுவேலிப் பகுதிகள் மீது நேற்றுக் காலை 6 மணியளவில் ஷெல் தாக்குதல்கள், கடற்படையினரின் பீரங்கித் தாக்குதல்கள், மற்றும் விமானக் குண்டுவீச்சு ஆகியவற்றுடன் இராணுவ நடவடிக்கைகளை படையினர் ஆரம்பித்தனர்.

வளலாய்ப் பகுதியில் நிலை கொண்டிருந்த படையினர் தொண்டமனாறு, கதிரிப்பாய், பத்தமேனி ஆகிய பகுதிகள் ஊடாக கனரக வாகனங்கள் சகிதம் முன்னேற முயன்றனர்.

அவர்கள் மீது கடும் தாக்குதலை நடத்தி, அவர்களின் முயற்சியை முறியடிப்பதில் விடுதலைப் புலிகள் தீரத்துடன் ஈடுபட்டனர். அங்கு உக்கிர மோதல்கள் இடம்பெற்று படையினரை புலிகள் விரட்டி அடித்ததாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

முன்னேற முயன்ற படையினருக்கு உதவியாக குடியிருப்புகளை நோக்கி ஷெல், பீரங்கி மற்றும் விமானக் குண்டுவீச்சுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

வளலாயிலிருந்து கதிரிப்பாய் ஊடாக தீத்தாங்குளம் பிள்ளையார் கோயில் வரை முன்னேறிய படையினர் புலி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

நேற்றைய மோதலின் போது விடுதலைப் புலிகளினால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் மற்றும் பொருள்கள் வருமாறு:-

- ★ ரி - 56 - 2ரகத் துப்பாக்கி — 1
- ★ ஐ. எம். ரவைகள் — 1சோடி
- ★ தலைக்கவசம் — 1
- ★ கிட்பாக் — 1

## இரத்தம் வழங்க கோரிக்கை

யாழ். ஆஸ்பத்திரி இரத்த வங்கிக்கு இரத்தம் உடன் தேவைப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இரத்த தானம் செய்ய விரும்புவோர் யாழ். ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள 'பாலம்' பணிமனையில் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

(இ-5)

## மக்கள் இடம்பெயர்வு

வளலாய்ப் பகுதியில் நேற்று இடம்பெற்ற மோதல்களை அடுத்து தம்பாலை, வருணன், கதிரிப்பாய், பத்தமேனி, அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி தெற்கு, தென்மூலை ஆகிய பகுதிகளில் இருந்து பலர் இடம்பெயர்ந்தனர்.

அதேசமயம் வடமராட்சியிலும் படையினரின் மும்முனைத் தாக்குதல்கள் இடம்பெற்ற பகுதிகளில் இருந்து மக்கள் வெளியேறி உள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

## தமிழ்நாட்டில் எழுவர் பலி

மதுரை மாவட்டம் வேலூரில் அரசுப் போக்குவரத்து பஸ் ஒன்றும் லொறி ஒன்றும் நேருக்கு நேர் மோதிக்கொண்டதில் 7 பேர் உயிரிழந்தார்கள். 20 பேர் படுகாயமடைந்தனர்.

(இ-10)

## உயிரிழந்தோர் விவரம்

யாழ்ப்பாணம், மே 29

வடமராட்சியில் நேற்று இடம்பெற்ற, விமானத் தாக்குதல்களிலும் மற்றும் ஷெல் பீரங்கித் தாக்குதல்களிலும் இறந்தோர் விவரம் வருமாறு:-

★ வி. நவரட்ணம் (வயது 50 — வல்வெட்டித்துறை.)

★ அவரது மனைவி நாகலட்சுமி நவரட்ணம் (வயது 40]

★ எஸ். ஆனந்தவேல் [வயது 47 — வேம்படி, வல்வெட்டித்துறை).

★ செல்வி. சௌந்தரராசா சாந்தினி [வயது 28 — தெணியம்பை.]

★ சார்லீஸ் றோசன் சௌந்தரராசா (வயது 24 — தெணியம்பை.)

[6 ஆம் பக்கம் பார்க்க]

## காயமடைந்தோர்

வடமராட்சி மே 29

நேற்று வடமராட்சிப் பகுதியில் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் நடத்திய தாக்குதல்களின்போது படுகாயமடைந்து பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டோர் விவரம் வருமாறு:-

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த எஸ். நரேந்திரன் [வயது 17], கே. றோசான் [வயது 18], எம். ராஜன் [வயது 18], ந. விஜயலட்சுமி [வயது 27], என். பாலச்சந்திரமூர்த்தி [வயது 63 — காட்டுவளவு], எஸ். வினோதினி [வயது 25], ராஜலட்சுமி [வயது 37 — வேம்படி].

பொலிகண்டியைச் சேர்ந்த இ. தவேஸ்வரன் [வயது 29], வி. ஜெயவர்மா [வயது 20], சின்னராசா நேசராசா [வயது 28 — சமரபாகு], மாணிக்கம் திருப்பதி [வயது 40],

[6 ஆம் பக்கம் பார்க்க)

## மாதகல் பகுதியிலும் விமானக் குண்டு வீச்சு

மாதகல் சம்பில்துறைப் பகுயில் — கரையோரங்களை நோக்கி நேற்று நண்பகலுக்கு முன்னர் விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

அப்பகுதியில் ஐந்துக்கும் மேற்பட்ட குண்டுகள் வீசப்பட்டன. சேதங்கள் பற்றிய விவரம் ஏதும் தெரியவரவில்லை.

இதேவேளை —

மாதகல், திருவடிநிலை கடற்பரப்பில் இருந்து நேற்றுப் பிற்பகல் 2 - 30 மணியளவில் படையினர் கரையோரப் பகுதிகளை நோக்கி பீரங்கித் தாக்குதலை நடத்தினர்.

காரைநகர் படையினரும் பொன்னாலைப் பகுதியை நோக்கி ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர்.

[ஓ-28-5]

## மன்னிப்புச் சபை பிரதிநிதியின் வீடு மீது தாக்கு

கொழும்பு, மே 29

அனைத்துலக மன்னிப்புச் சபையின் இலங்கைப்பிரதிநிதி மீது குருநாகலில் பெற்றோல் குண்டு வீச்சு நடத்தப்பட்டது.

வழக்கறிஞரான கோதாகொட என்பவரே மேற்படி பிரதிநிதியாவார். குண்டு வீச்சினால் அவரின் குருநாகலில் உள்ள வீடு சேதமுற்றதாகக் கூறப்படுகிறது

தமது வீட்டுக்கு ஏற்பட்ட சேதத்தால் 8 லட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக திரு கோதாகொட தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் பொலீஸிலும் முறைப்பாடு செய்துள்ளார்.

(இ-10)

## குடாநாட்டுக்கு வெளியிலும் ராணுவ நடவடிக்கைகள்

கொழும்பு, மே 29

நேற்று வடமராட்சி, பத்தமேனிப் பகுதிகளில் இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்ட அதேவேளை, வடக்கு. கிழக்கின் ஏனைய சில பகுதிகளிலும் படை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதாக பாதுகாப்பு வட்டாரங்கள் கொழும்பில் தெரிவித்தன.

வவுனியாவில் மன்னார் — மதவாச்சி பிரதான வீதியிலும் —

மன்னார் மாவட்டத்தில் வெலிக்கலோ என்ற இடத்திலும் —

திருமலை, மட்டக்களப்பு மாவட்டங்கள் மற்றும் தொப்பிகலை காட்டுப் பிரதேசம் ஆகிய வற்றிலும் விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

[உ-எ]

## இராணுவ நடவடிக்கை 48 மணி நேரம் நீடிக்கலாம்?

### படையினர் தரப்பில் ஊகம்

கொழும்பு, மே 29

''அரச படையினர் பலாலி இராணுவ முகாமின் முன்னணிப் பாதுகாப்புப் பிரதேசத்தை விஸ்தரிக்கும் முகமாக நேற்று அதிகாலை பலாலியின் தென் கிழக்குப் பகுதியில் மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கை ஒன்றை ஆரம்பித்துள்ளனர். விமானப் படைஉதவியுடன் மேற்கொள்ளப்படும் இந்நடவடிக்கை 48 மணித்தியாலங்களுக்கு நீடிக்கப்படக்கூடும்.''

கூட்டுப்படைகள் தலைமை அலுவலகப் பேச்சாளர் கேர்ணல் சரத் முனசிங்க நேற்று செய்தியாளர்களிடம் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த இராணுவ நடவடிக்கை யாழ்ப்பாண நகரைக்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## மணலாறில் நேற்றும் 2 படையினர் பலி!

### இம்மாதம் நடந்த 3 ஆவது தாக்குதல்

யாழ்ப்பாணம், மே 29

மணலாறில் நேற்றுக்காலை 7 மணியளவில் விடுதலைப் புலிகள் நடத்திய ஒரு நிமிட மின்னல் வேகத் தாக்குதலில் இரு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

சிலோன் தியேட்டர் முகாமுக்கும் முந்திரிகைக்குள முகாமுக்கும் இடையே அமைந்திருந்த படையினரின் காவலரண் மீதே இத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்த இரு முகாம்களுக்கும் இடையே அமைந்த காவலரண்கள் மீது இம்மாதத்தில் புலிகள் நடத்திய மூன்றாவது

(6 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## SHAMROCK

யாழ். சுண்டிக்குளி.

PAPER CLASS

Sat, Sun.

PHY. 4-00—5 00

CHE. 5-00—6-30

94 பொருளியல்

திரு. E. பிரபாகரன்

ஆரம்பம்:

30—05—1992 சனி

7-00 முற்பகல்

[21166]



தொழில் நுட்பக் கல்லூரி,

இறுதிப் பரீட்சை - 1989/ 1990/ 1991

ஆங்கில தேசிய தராதரப் பத்திரம் N. C. E

## வாய்மொழிப் பரீட்சை

மேற்படி பரீட்சை 1992-06-01 ஆம் திகதி தொடங்கவிருப்பதால், பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்கள் அன்றைய தினம் முற்பகல் 8-30 மணிக்கு ஆங்கிலத்துறைத் தலைவரைச் சந்திக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

- அதிபர்.

தொழில்நுட்பக் கல்லூரி,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
1992-05-28

[சி-2369]



சுவாமி விபுலாநந்தர்

## நூற்றாண்டு விழா

மானிப்பாய் இந்துக் கல்லூரி
பழைய மாணவர் சங்க அனுசரணையுடன்
நடத்தும்

யாழ். மாவட்டப்
பாடசாலை மாணவர்களுக்கிடையிலான

### நாவன்மைப் போட்டியும்,
### கட்டுரைப் போட்டியும்

மேற் பிரிவு — ஆண்டு 12, 13
மத்திய பிரிவு — ஆண்டு 9, 10, 11
கீழ்ப் பிரிவு — ஆண்டு 5, 6, 7, 8

தலைப்பு:

1. விபுலாநந்தரின் கல்விப் பணி
2. விபுலாநந்தரின் இலக்கியப் பணி
3. விபுலாநந்தரும் இசையும்
4. முத்தமிழ் வித்தகர்

தினம்: 05 - 06 - 1992

வெள்ளி காலை 9 மணி

இடம்: மானிப்பாய் இந்துக் கல்லூரி

★ பங்குபற்றுபவர்கள் தமது பாடசாலை அதிபரின் உறுதிப்படுத்திய கடிதத்துடன் வர வேண்டும்.

★ மேல் தரப்பட்ட தலைப்புகளில் ஒன்றினைத் தெரிவு செய்தல் வேண்டும்.

★ நாவன்மைப் போட்டி - மேற்பிரிவு - 8 நிமிடங்கள். மத்திய பிரிவு - 6 நிமிடங்கள், கீழ்ப்பிரிவு - 4 நிமிடங்கள்.

★ கட்டுரைப் போட்டி - மேற்பிரிவு - 400 சொற்களுக்குக் குறையாமலும், மத்திய பிரிவு - 250 சொற்களுக்குக் குறையாமலும், கீழ்ப்பிரிவு - 150 சொற்களுக்குக் குறையாமலும் எழுதப்படல் வேண்டும்.

★ நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

★ வெற்றி பெறுவோருக்கு பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்படும்.

கல்லூரியில் சுவாமி விபுலாநந்தர் நூற்றாண்டு விழா 10-06-92 புதன்கிழமை நடைபெறும்.

- செ. கேசவராஜன்,
அதிபர்.

மானிப்பாய் இந்துக்கல்லூரி,

[சி-2368]



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## பதவி வெற்றிடம்

கணனி நிகழ்ச்சி முறையாளர் [Computer Programmer] பதவிக்குப் பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் 1992-06-20 ஆம் திகதி வரை என்னால் பெற்றுக்கொள்ளப்படும்.

**சம்பள அளவுத்திட்டம்:**

ரூபா 3050 – 19 x 75-4475/– மாதமொன்றிற்கு.

**தகைமைகள்:**

அ. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் பட்டம்.

ஆ. ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளில் கணனி நிகழ்ச்சிகளை முறைப்படுத்தும் ஆற்றல்.

இ. வயது 35 ஆண்டுகளுக்கு மேற்படலாகாது.

**தெரிவு:**

தகுதிகாண் பரீட்சை [Aptitude Test], நேர்முகப் பரீட்சை ஆகியவற்றின் மூலம்.

**குறிப்பு:**

தெரிவு செய்யப்படும் அபேட்சகரின் சிறப்புத் தகைமைகளையும் / அனுபவத்தையும் கவனத்திற் கொண்டு சம்பள அளவுத் திட்டத்தின் பொருத்தமான படியில் வைக்கப்படுவார்.

இப்பல்கலைக்கழகத்தின் தாபனக்கிளையின் சிரேஷ்ட உதவிப் பதிவாளரின் அலுவலகத்தில் கிடைக்கக்கூடிய படிவங்களில் விண்ணப்பங்கள் செய்யப்படல் வேண்டும். தபால் மூலம் படிவங்களைப் பெறவிரும்புவோர் சுய முகவரியிட்டு முத்திரையொட்டப்பட்ட 23x10 ச.மீ அளவுடைய கடித உறையை அனுப்புதல் வேண்டும். விதிக்கப் பெற்ற படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மாத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும்.

அரச திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகளிலுள்ள விண்ணப்பதாரிகள் அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

விண்ணப்ப முடிவு திகதியின் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் பிழையாக அல்லது தெளிவில்லாமல் விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

– பதிவாளர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1992-05-26.

[சி-2367]


# பௌத்த விகாரையில் சீருடையினர் கொள்ளை

கொழும்பு, மே 29

கேகாலை பகுதியிலுள்ள இம்புல்கஸ்தெனிய வட்டாரம என்ற இடத்திலுள்ள பௌத்த விகாரைக்குள், இராணுச் சீருடையில் பிரவேசித்த இருவர் அங்கிருந்து சுமார் ரூபா 75 ஆயிரம் பெறுமதியான பொருள்களை கொள்ளையடித்துச் சென்றனர் என்று அறிவிக்கப்படுகிறது.

கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற இச் சம்பவத்தின் போது சீருடையில் வந்தவர்கள் விகாரையின் காவலாளியை துப்பாக்கி முதலான ஆயுதங்களைக் காட்டி அச்சுறுத்தி அதன் பின்னர் விகாரைக்குள் பிரவேசித்து பொருள்களை அபகரித்துச் சென்றனர் என்று பொலீஸார் தெரிவித்தனர்.

(த)


சுழிபுரம்

## நாவலர் சனசமூக நிலையம்

[பறாளாய்]

எமது நிலையத்தின் கட்டட நிதிக்காக விற்பனை செய்யப்பட்டுக் கொண்டிருக்கும் அதிர்ஷ்ட லாபச் சீட்டு குலுக்கப்படும் தினம் 22-05-1992 இல் இருந்து 14-07-1992 ஆக மாற்றப்பட்டு உள்ளது என்பதை அறியத் தருகிறோம்.

இங்ஙனம்:
நாவலர் சனசமூக நிலைய-
நிர்வாகத்தினர்.

[4703]



தேசிய ஆங்கில தராதரப் பரீட்சை - 1992

## N. C. E. EXAM - 1992

Closing Date — 15-06-1992
Date of Exam — 11-07-1992

விண்ணப்பபடிவங்கள் எம்மிடம் பெறலாம்.

வகுப்புக்கள் 01-06-1992 காலை 9 மணிக்கு ஆரம்பமாகும்

ஆசிரியர்:- த. ந. பஞ்சாட்சரம்

மேலதிக விவரங்கள்:-

நிர்வாகி,

New Science Academy,
Jaffna.

[சி-2630]



## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



நயினை

### திருமதி சின்னையா மாரிமுத்து

மண்ணில்: —
விண்ணில்: 29 — 04 — 1992

மண்ணில் இருந்தபோது எமது குடும்பத்துடன்
இணைந்து வாழ்ந்தது போல் - பாட்டி
விண்ணிலும் எமது தந்தை, சகோதரன்-சகோதரியுடன்
இணைந்து வாழ வேண்டும்.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

29-4-92 இல் அரியாலையில் உயிர்நீத்த பாட்டியின் மரணச்சடங்கில் பங்கு கொண்டவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பொ. சற்குணானந்தன் குடும்பம்.
[பேரன்]

7ஆம், வட்டாரம்,
நயினாதீவு,

"சித்ராஸ்"
முள்ளி வீதி, அரியாலை.

[21171]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளை நூலகம் மன்றம் யாழ்ப்பாணம்

# வற்றாப்பளைச் சம்பவம்:
# விசாரணை ஆரம்பமானது

## பத்திரிகையாளருக்கு அனுமதி இல்லை

வவுனியா, மே 29

வற்றாப்பளை அம்மன் கோவிலின் வருடாந்த பொங்கல் உற்சவத்தின் போது இடம்பெற்ற ஷெல் தாக்குதல் பற்றிய ஜெயலத் குழுவினரின் விசாரணை கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பமான போது பத்திரிகையாளர்கள் எவரும் அங்கு அனுமதிக்கப்படவில்லை என்று அறிவிக்கப்படுகிறது.

வவுனியா கச்சேரியின் துரித செயல்பாட்டு அலுவலகத்தில் காலை 9 மணி முதல் பிற்பகல் 4 மணி வரை விசாரணைகள் நடைபெற்றன.

அம்மன் கோவில் பரிபாலன சபையின் முக்கிய உறுப்பினர் ஆலய குருக்கள், சம்பவத்தின் போது காயமுற்றவர்களில் ஒருவர், அப் பகுதி கிராம சேவையாளர் உட்பட 5 பேர் சாட்சியமளிக்க முல்லைத்தீவிலிருந்து வந்திருந்தனர்.

ஓய்வுபெற்ற நீதியரசர் ஜெயலத தலைமையிலான இக் குழுவில் இராணுவ மேஜர் ஜெனரல் பாலரட்ணராஜா, சிரேஷ்ட பொலீஸ் அதிபர் அப்துல் மஜீத் ஆகியோர் இடம் பெற்றிருக்கின்றனர். [த]

## உற்சவம்

யாழ்ப்பாணம், மே 29

கோப்பாய் தெற்கு ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் வருடாந்த மகோற்சவம் இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறும். [த]

★ ★ ★

நவாலி, மே 29

வடலியடைப்பு ஸ்ரீ மகா காளி அம்மன் கோவிலின் வருடாந்த பொங்கல் விழா இன்று நடைபெறும். [த-100]

★ ★ ★

கொழும்புத்துறை, மே 29

கொழும்புத்துறை மேற்கு வில்வையடி அருள்மிகு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் இன்று மாலை மணிக்கு விசேட அபிஷேக ஆராதனையுடன் நடைபெறும். [த-30]

### தமிழகம் வரும் அமைச்சர்களுக்கு

## கறுப்புக் கொடி காட்ட பாட்டாளி கட்சி முடிவு

தமிழ் நாட்டுக்கு அடுத்த மாதம் விஜயம் செய்யவிருக்கும் மத்திய அமைச்சர்களுக்குக் கறுப்புக் கொடி காட்ட பாட்டாளி மக்கள் கட்சி தீர்மானித்துள்ளது.

அக்கட்சியின் தலைவர் டாக்டர் ராம்தாஸ் இத்தகவலைத் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளுக்கு இந்திய அரசு தடை விதித்துள்ளதைக் கண்டித்தே இக் கறுப்புக் கொடிப் போராட்டம் நடத்தப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

ராஜீவ் காந்தி கொலையில் விடுதலைப் புலிகளுக்கும் பங்கு உண்டு என்ற விஷயம் விடுதலைப் புலிகளைத் தடை செய்ததற்கான காரணங்களில் ஒன்றாகத் தெரிவிக்கப்படாதது பெரிய அதிசயமாக இருப்பதாகவும் டாக்டர் இராம்தாஸ் கூறினார்.

விடுதலைப் புலிகள் மீதான தடையை எதிர்த்து தமிழகத்தில் நடத்தப்படலாம் என்று எதிர்பார்க்கப்படும் போராட்டத்துக்கு தமிழ்த் தேசியக் கட்சியின் ஸ்தாபகத் தலைவர் பி. நெடுமாறன் தலைமை வகிக்கக் கூடும் என்று தெரிவிக்கப்படுகின்றது. [த-எ]

## கந்தபுராண படனம்

மீசாலை இந்து இளைஞர் மன்றம் ஏற்பாடு செய்துள்ள கந்தபுராணப்படனம் மீசாலை திருநீலகண்ட வெள்ளைமாவடிப் பிள்ளையார் கோவிலில் கடந்த 8 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. படனப் பூர்த்தி எதிர்வரும் ஜூலை மாதம் 11 ஆம் திகதி நடைபெறும். [த]


பொருளியல்: கலாகரன்

சனி — ஞாயிறு

92 பிரிவு
— இலங்கைப் பொருளாதாரம் 9-10

93 பிரிவு - 1
— நெகிழ்ச்சிக் கோட்பாடு 8- 9

94 பிரிவு - 1
— பொருளாதார முறைமை 10-11

93/94 பிரிவு - 2
— பொருளாதார அடிப்படை பிரச்சினை 11-12

வினா - விடை வகுப்பு:

92 பிரிவு I — செவ்வாய், வியாழன் 8 — 9
92 பிரிவு II — செவ்வாய், வியாழன் 9 — 11

பகுதி I — உற்பத்தி சாத்திய வளையி
பகுதி II — வரவு செலவுத்திட்டம்

விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
[சி-2628]



விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

A/L [கலை, வர்த்தகம்]
94 பிரிவு II
93 பிரிவு III

சனி, ஞாயிறு வகுப்புக்கள்

ஆரம்பம்: 30-05-1992
(காலை 8-00 மணி.)

கலை, வர்த்தக வகுப்புக்களுக்குத் தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்.
முன்கூட்டியே அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்.
[சி-2626]


## Tender Notice

**University of Jaffna, Sri Lanka.**

### Supply of Uniform Material

Sealed tenders are invited for the supply of 500 meters Grey Polyester suiting

**Conditions**

1. Tenderers should forward a Postal Order/Money Order for Rs. 150/- being non-refundable tender fee drawn infavour of Bursar, University of Jaffna.
2. Sample of 6'' x 6'' material should be attached to the tender.
3. Selected tenderers should be able to supply the material within three weeks on receipt of the confirmed order at the University of Jaffna.

Forward the tender documents to the Bursar, University of Jaffna by registered post or personally with the Mark 'Tender for the Supply of Uniform Material' to reach him on or before 18 - 06 - 1992 at 10 a.m. Tenders will be opened on the same day at 10-30 a m.

— Registrar.

[C-2361]

### பெந்தோட்டையில்:

## இளைஞர்கள் சூடு! கான்ஸ்டபிள் பலி!

ஹெல்மட் இன்றி மோட்டார் சைக்கிளில் சென்ற இரண்டு இளைஞர்கள் போக்குவரத்துக் கடமையில் ஈடுபட்டிருந்த பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவரை சுட்டுக் கொன்றனர்.

இச்சம்பவம் கடந்த திங்கட்கிழமை பெந்தோட்டையில் இடம்பெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பொலீஸ் மீது சுட்ட பின்னர் அந்த இளைஞர்கள் அளுத்கம — எல்பிட்டிய வீதி வழியாகத் தப்பி ஓடிவிட்டனராம்.

பின்னர் பொலீஸார் வீதி ஓரத்தில் ஒதுக்குப்புறமான இடம் ஒன்றில் கைவிடப்பட்ட நிலையில் மோட்டார் சைக்கிளைக் கண்டு பிடித்தனர். [த-எ]

## நன்றி நவிலல்

### திருமதி பூரணம்மா வேலுப்பிள்ளை

கொல்லங்கலட்டி தெல்லிப்பழையைச் சேர்ந்த திருமதி பூரணம்மா வேலுப்பிள்ளை அவர்களின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டு ஆறுதல் அளித்து, அனுதாபம் தெரிவித்த உற்றார், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அனைவருக்கும் எனது இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அத்துடன் அன்னாரது இணுவில் இல்லத்தில் வெள்ளிக்கிழமை 22-05-92 இல் நடைபெற்ற வீட்டுக் கிரியைகளிலும், ஞாயிற்றுக்கிழமை 24-05-92 இல் நடைபெற்ற மதிய போசனத்திலும் கலந்து கொண்ட அனைவருக்கும் எனது இதய பூர்வமான நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சிவகுமார்,
(பொறியியலாளர், கொழும்பு,)

பரராச சேகரபிள்ளையார் கோவில்,
தெற்கு வீதி,
இணுவில்.

[4702]

## யாழ். வர்த்தகர் சங்கம்
## அறிவித்தல்

சங்கத்தின் பொதுக்கூட்டம் 22-05-1992 வெள்ளிக்கிழமை காலை 9-30 மணிக்கு யாழ் இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெற்றது. யாழ். நகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட சகல வர்த்தக நிலையங்களும், யாழ். வர்த்தகர் சங்கத்தில் 30-06-1992க்கு முன்னர் அங்கத்தவர்களாகச் சேர்ந்து கொள்ள வேண்டுமெனவும், தவறுபவர்கள் மீது ரூபா 500/- அபராதம் விதித்து அறவிடப்படுமெனவும் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

புதிய நிர்வாகத்திற்கு பின்வருவோர் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

| | |
|---|---|
| தலைவர்:- | திரு. செ. கந்தசாமித்துரை |
| செயலாளர்:- | க. வி. குலரத்தினம் |
| பொருளாளர்:- | பூ. ரவிதரன் |
| உப தலைவர்:- | மு. கனகசபாபதி |

- தலைவர்.

''ரகுராம்''
53, கஸ்தூரியார் வீதி.
யாழ்ப்பாணம்.

(21168)

### வலி. கி. தெ. ப. ப. நோ. கூ. சங்கம்
### நீர்வேலி.

## 24ஸ்ரீ9984 (லேலண்ட்) லொறி விற்பனைக்கான கேள்வி விண்ணப்பம் கோரல்

மேற்படி சங்கத்தின் 24ஸ்ரீ9984 இலக்க அசோக் லேலண்ட் லொறியை விற்பனை செய்வதற்கு கேள்வி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. குறித்த லொறியை வாங்க விரும்புவோர் தமது கேள்வி விண்ணப்பங்களை ''பொது முகாமையாளர், வலி. கிழக்கு, தென்பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், நீர்வேலி'' என்ற விலாசத்திற்கு பதிவுத் தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைக்கலாம். கேள்வி விண்ணப்பம் அனுப்பப்படும் தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''லொறிக்கான கேள்வி விண்ணப்பம்'' என எழுதப்படல் வேண்டும்.

குறித்த லொறியைப் பார்வையிட விரும்புவோர் சங்கத் தலைமையலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.

-பொது முகாமையாளர்.

நீர்வேலி
19-05-1992

[சி 2370]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

மில்லிற்கு தேவையான Grinder No-7 Huller விற்பனைக்கு உண்டு. தொடர்பு: திரு. க. ஜெயானந்தன். 83/16, அரசடி றோட், தஞ்சி ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

[21152]

## மணமகன் தேவை

சாவகச்சேரி, இந்து, பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியை வயது 37, நட்சத்திரம் உத்தராடம், 1 ஆம் பாதம், செவ்வாய்க் குற்றமற்றவர். அரச கூட்டுத்தாபன ஊழியர், தனி முதலீட்டாளர் தென்மராட்சிப் பகுதியில் விரும்பத்தக்கது. சீதனம் வீட்டுடன் கொடுக்கப்படும். குமாரசாமி, காளி கோவிலடி, டச்சு வீதி, சாவகச்சேரி வடக்கு.

[21141]

## சோதிடம்

ஜாதகக் குறிப்பு, கைரேகை, எண் சோதிடம், விவாகப் பொருத்தம் பார்க்க தொடர்பு: நேரம் தினமும் பிற்பகல் 2-00 மணி முதல். மாலை 7-00 மணி வரை. க. சிவானந்தன், பிரபல சோதிடர் ஆனந்தா சோதிட நிலையம். 249 (311), நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தலைமை: 384, கோவில் வீதி, நல்லூர் வடக்கு. தினமும் காலை 7-00 — 12-00 வரை

[21118]

## றப்பர் ஸ்டாம்ப்

தென்மராட்சி மக்களுக்கு ஓர் நற்செய்தி. உங்களுக்கு தேவையான றப்பர் ஸ்டாம்புகளை விரும்பிய டிசைன்களில் செய்து கொள்ள இன்றே நாடுங்கள். சோதி அச்சகம், மேல்மாடி இல. 25, தனங்களப்பு வீதி, சாவகச்சேரி.

[சி-2358]

## O/L கணிதம்

92 பரீட்சையில் ஒரே தரத்தில் உயர்ந்த பெறுபேறடைய கற்பிக்கப்படும். ஆசிரியர் B.Sc (Cey.) 85, சிவன் கோவிலடி, திருநெல்வேலி.

[21161]

**94 ஔியியல்**

Sat&Sun 12-00—1-00

ஆரம்பம்:

30-05—1992

Mr. ஜெயசீலன்

B.Sc. [Hons]

**"A" Level Centre,**

Point pedro Road,
1st, Lane,
Jaffna.

[சி-2612]

**வீணை, புல்லாங்குழல் ★ வகுப்புகள் ★**

திங்கள், வெள்ளி

பி.ப. 3-00 மணி

ஆரம்பம்:

05-06—1992

**கலாலயா**

விக்டோறியா வீதி,
[ஆஸ்பத்திரியின் பின்புறம்]
யாழ்ப்பாணம்.

(சி-2621)

## மணப்பெண்கள் தேவை

இந்து 33 வயது, குற்றமற்றவர் அரச வேலை, 1 இல் இராகு அல்லது கேது உடைய பெண்ணும், 32 வயது, குற்றமற்ற, அரச பணியாளருக்கும், சைவ போசன 40 வயது, குற்றமுள்ள எக்கவுண்டனுக்கும், குற்றமற்ற 34 வயது சொந்தக் கடை வைத்திருப்பவருக்கும் தேவை. மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம்.

[21158]

குற்றமற்ற 35 வயது எக்கவுண்டனுக்கும், குற்றமுள்ள 26 வயது ஆயுர்வேத டாக்டருக்கும். குற்றமற்ற 29 வயது, Ph.D. க்கும், 7 இல் செவ்வாய் 31 வயது எஞ்சினியருக்கும் தேவை. மங்கள ஏஜென்சி, யாழ்ப்பாணம்.

[21159]

## ஆங்கிலப் பயிற்சி

English Grammar, Spoken English, English Literature, English Elocution (பேச்சுத் திறன்) 3 மாதப் பயிற்சி, கிழமையில் இரண்டு நாட்கள். V. N. Kandasamy A. I. B Part I, London Inter (London) இல 87, திருநெல்வேலி றோட். (பாலத்திற்கு அண்மையில்) கொக்குவில்.

[21167]

## இலவச திருமண சேவை

33 வயது ஆயிலியம், B.A. Finance Analyst U. S. A இல் கடமை புரிபவருக்கு மணமகள் தேவை. திருமணம் இலங்கையில். தொடர்பு; ஞாயிறு காலையில். து. விமலா, யாழ். நாச்சிமார் கோவிலடி.

[4890]

43 வயது, இளமை, தோற்றம், உத்தராடம், செவ்வாய் 4, பெண்ணுக்கு உள்ளூர், U. K. அவுஸ்திரேலியா இடங்களில் மணமகனைத் தேடுகின்றனர். அவரின் சகோதரர் வைத்திய நிபுணர். து. விமலா, யாழ். நாச்சிமார் கோவிலடி.

[4892]

## தவறிவிட்டது

28-5-92 ஆம் திகதி ஆனைக்கோட்டைக்கும், மாதகலுக்கும் இடையில் சேதுநாதன் சுதர்சன், சேதுநாதன் வசந்தாதேவி, சிவக்கொழுந்து சேதுநாதன் ஆகியோரின் அடையாள அட்டைகள் அடங்கிய கறுப்பு பேர்ஸ் மற்றும் முக்கிய ஆவணங்களுடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் யாழ். மானிப்பாய் வீதியிலுள்ள லமோனி மோட்டோர்ஸில், (ஈழநாடு காரியாலயம் முன்பாக) ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

[21170]

# நிரு ரியூசன் சென்ரர்

**கோண்டாவில்.**

**A/L 92**

பொருளியல் — வினா விடை

ஆரம்பம்: 02 - 06 - 1992
(செவ்வாய்)

★ கேள்வி நெகிழ்ச்சி வினா - விடை
(காலை 10-00 — 11-00 மணி)

★ சந்தைச் சமநிலை வரைபட விளக்கம்
(ஏறத்தாழ 20 படங்கள் வரையப்படும்)
(காலை 11-00 — 12-00 மணி)

வியாழன் சனத்தொகை
(11-00 — 12-00 மணி)

வரவு செலவுத் திட்டம், சென்மதி நிலுவை வினா - விடை

— நிர்வாகி.

(சி 2619)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 05 — 04 — 1905

மறைவு: 29 — 04 — 1992

திருமதி
**கந்தையா சிவபாக்கியம்**

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

11, கிஞவானை லேன்,
கோப்பாய் தெற்கு;
கோப்பாய்.

[4701]

# முதலாவது பிறந்த நாள் ★ வாழ்த்து ★



## ★ சாமினி தவராசா ★

''தாய் வீடு'' கொக்குவில் மேற்கைச் சேர்ந்த தவராசா - வசந்தவேணி தம்பதிகளின் செல்வப் புதல்வி சாமினி இன்று (29-05-1992) தனது முதலாவது பிறந்த நாளை ஜேர்மனியில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார் இவரை சீரும் சிறப்புடன் பல்லாண்டு காலம் வாழ்க என அன்பு அப்பா, அம்மா கொக்குவில் மேற்கு பெரியப்பா, பெரியம்மா, சுமதி அக்கா, சுபாத்தாக்கா, ஜேர்மன் முரளி அண்ணா, முகுந்தன் அண்ணா, யாழ்ப்பாணம் பெரியப்பா, பெரியம்மா, பார்த்தீபன் அண்ணா, கனடா பெரியப்பா, பெரியம்மா, லாவண்யாக்கா, சுகன்யாக்கா, கொக்குவில் மேற்கு பெரியத்தை, மாமா, அகல்யா, அஜந்தா, ஜனார்த்தனன், கேசவன், நதியா, கொக்குவில் மேற்கு சின்னத்தை, மாமா, செழியன், பிரதீபன், வட்டுக்கோட்டை சின்னத்தை, மாமா, அரவிந்தன், ஆதவன், சண்டிலிப்பாய் ஆசையத்தை, குலம்மாமா, யாழினி, கொக்குவில் மேற்கு உமா அத்தை, மாமா, பிருந்தாபன், சங்கரத்தை அம்மம்மா, சித்திமார், பெரிய மாமா, மாமி கனடா பெரியம்மா, பெரியப்பா, அபிராமியக்கா, தம்பி மதுசூதனன், சுவிஸ் ரகுமாமா, மாமி, லண்டன் சிவாமாமா ஆகியோர் வாழ்த்துகின்றனர்.

[21131]

# 8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 11 — 03 — 1962

உதிர்வு: 29 — 05 — 1984

## M. R. மணிவண்ணன்

[யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவன்]

மணிவண்ணா, கலைவண்ணா மலர்முகத்தின்
மதிவண்ணா மனைவாழ்வில் மகிழ்ச்சி பூக்க
அணிசெய்த அன்பில் வண்ணா! உமைப் பாற்றிச்
சுகமெல்லாம் பொங்குகின்ற ஆர்வத்தோடு
பணிசெய்யப் பால்வார்க்கக் காத்திருந்தோம்
பட்டமரம் போலானோம் பரிதவித்தோம்
தணிவில்லாத் துயரத்தால் தவிக்கவைத்தே
தற்பரனார் பொற்பதத்தில் தஞ்சம் கண்டீர்!

பிரிவால் துயருறும்:
அம்மா, தம்பி, உற்றார், உறவினர்கள்.

41, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.

[21143]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழகத்தை பிரிக்க சதியாம் 9 பேர் மீது குற்றச்சாட்டு

## அவர்களில் பொட்டம்மான் உட்பட மூவரும் அடங்குவர்

சென்னை, மே 29

தமிழகத்தை இந்தியாவில் இருந்து துண்டித்து தனி நாடாக்குவதற்காக சதி வேலையில் ஈடுபட்டதாகக் கூறப்படும் ஒன்பது பேர் குற்றவாளிகளாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளார்கள்.

ஏற்கனவே ராஜீவ் காந்தி கொலை வழக்கில சந்தேக நபராகக் குறிப்பிடப்பட்டுள்ள விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த பொட்டம்மான் இந்தச் சதியிலும் குற்றவாளியாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளார்.

ராஜீவ் காந்தி கொலை பற்றி விசாரணை நடத்த நியமிக்கப்பட்டுள்ள சிறப்பு நீதிவான் எம். எம். சித்தீக் இந்தப் பிரகடனத்தை நேற்று வெளியிட்டார்.

இந்த ஒன்பது பேரும் தலைமறைவாக உள்ளனர். அதனால் இவர்கள் அனைவரும் குற்றவாளிகளாகப் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளனர் என்றும்—

இவர்களில் ஆறு பேர் தமிழ் நாட்டில் உள்ள பிரிவினை அமைப்பு ஒன்றைச் சேர்ந்தவர்கள் என்றும்—

பொட்டம்மான் உட்பட மூன்று பேர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்கள் அனைவரும் அடுத்த மாதம் 25 ஆம் திகதி காலை 10.30 மணிக்குள் சென்னை சிறப்பு நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும் என்று நீதிவான் சித்தீக் உத்தரவிட்டார்.

தமிழகத்தில் சதி வேலைகளைச் செய்வதற்கும் கொலைக் குற்றங்களைப் புரிவதற்கும், சமூக விரோத வேலைகளில் ஈடுபடுவதற்கும் இந்த பிரிவினை அமைப்பைச் சேர்ந்தவர்களுக்கு பொட்டம்மான், ரமணன், காந்தன் ஆகிய மூவரும் யாழ்ப்பாணத்தில் வைத்து ஆயுதப் பயிற்சி வழங்கியிருக்கிறார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையைச் சேர்ந்த இம் மூவரைத் தவிர, பாண்டியன், பாலன் என்கிற சுப்பிரமணியம், கிருஷ்ணமூர்த்தி, மாரியப்பன், கோவை பீளைமேட்டைச் சேர்ந்த செல்வராஜன் கோவை பிரபாகரன் ஆகியோர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள்.

ஏற்கனவே இந்தச் சதி வழக்கு தொடர்பாக 23 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் இந்திய வானொலி தெரிவித்தது. [இ-எ]

## "தமிழீழம்" நூலின் பிரதிகள் பொலீஸாரினால் பறிமுதல்

### பாண்டிச்சேரியில் சம்பவம்

பாண்டிச்சேரியில் கம்பன் கலையரங்கில் பாரதிதாஸன் நூற்றாண்டு விழா நடந்து கொண்டிருந்தபோது தமிழீழம் என்ற தலைப்பிலான நூலின் பிரதிகள் விற்பனை செய்யப்பட்டன

அதனைக் கண்ணுற்ற பொலீஸார் அப்புத்தகங்களை பறிமுதல் செய்தனர் என்றும்—

அப்புத்தகத்தில் தணு என்ற தற்கொலைப் பெண் குறித்தும் சில வரிகள் குறிப்பிடப்பட்டிருந்தன என்றும்— தெரிவிக்கப்பட்டது. [த-எ]

## கிளாலி ஊடாக படகுசேவை ஆரம்பிப்பதற்கு முயற்சி

யாழ்ப்பாணம், மே 29

பூநகரிப் பகுதியில் உள்ள கிளாலி பகுதியில் இருந்து சாவகச்சேரி பகுதிவரையான படகுச்சேவை ஒன்றை ஆரம்பிக்க முயற்சி மேற்கொள்ளப்படுவதாக அறியவருகிறது.

கொம்படி - ஊரியான் பயணப்பாதைகள் சீர்கெட்டுள்ளதை அடுத்தே புதிய பயணப் பாதை ஒன்றை ஆரம்பிக்க முயற்சி எடுக்கப்படுகிறது.

கிளாலி - சாவகச்சேரி படகுச்சேவை ஒன்றை ஆரம்பிக்க வேண்டிய தேவை பற்றியும் — அதற்கான அனுமதியை பெறுவது சம்பந்தமாகவும் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைமை அலுவலகத்துக்கும் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் தலைமை அலுவலகத்துக்கும் கோரிக்கைகள் அனுப்பப்பட்டிருப்பதாக தெரியவருகிறது.

இலங்கை செஞ்சிலுவைச் சங்க கிளிநொச்சிக் கிளையின் பூநகரிப் பிரிவினர் இக்கோரிக்கைகளை அனுப்பியுள்ளனர். கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரிடமும் மேற்படி கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் அறியவந்தது

## மலையக இளைஞர் கைது: செஞ்சிலுவைக்கு அறிவிப்பு

மடுல்சீமை பொலீஸாரால் அண்மையில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட 4 தமிழ் இளைஞர்கள் தொடர்பாக கொழும்பு செஞ்சிலுவைச் சங்கத் தலைமையகத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்க பசறை மாவட்ட பிரதிநிதி எஸ். சதாசிவம் இத்தகவலைத் தெரிவித்தார்.

தொழில் நிமித்தம் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து விட்டு தமது சொந்த இடத்துக்கு திரும்பியபோதே இவர்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர். (த-3)

## சூழலைப் பாதுகாப்பதற்கு உணர்வூட்டும் இயக்கம்

### மக்களுக்கு உறுதிமொழிப் பத்திரம்

சுற்றுச் சூழல் பாதுகாக்கப்பட வேண்டிய அவசியம் பற்றி பொதுமக்களிடையே விழிப்புணர்வைத் தூண்ட ஐ. நா. சுற்றுச் சூழல் அபிவிருத்தி உச்சி மாநாடு 'உறுதிமொழி' ஒன்றைப் பிரகடனப்படுத்தியுள்ளது.

பூமியை தற்போதைய சந்ததிக்காகவும், எதிர்கால சந்ததிக்காகவும், ஒரு பாதுகாப்பான, ஆரோக்கியமான, ஆதரிக்கும் உறைவிடமாக ஆக்குவதற்கு என்னால் முடிந்தளவு உதவுவேன் என்று திடசங்கற்பம் செய்து கொள்ளும் வகையில் அந்த உறுதிமொழி அமைந்துள்ளது.

மாநாடு நடைபெறும் ஜூன் முதலாம் திகதியிலிருந்து 12 ஆம் திகதி வரையிலான காலத்தில் இந்த உறுதிமொழியை எடுக்குமாறு கோரி மக்களிடையே உலகம் முழுவதிலும் பிரசாரம் மேற்கொள்ளப்படும்.

யாழ். மாவட்டத்திலும் சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்கும் உணர்வைத் தூண்டும் இயக்கம் நடைபெறவுள்ளது.

சுற்றுச் சூழல் அபிவிருத்திக்கான தென்கிழக்காசிய நடுநிலையத்தின் அனுசரணையுடன் மில்க்வைற் நிறுவனத்துடன் இணைந்து ஐக்கிய நாடுகள் சங்க யாழ். பிரிவு இதனை ஏற்பாடு செய்துள்ளது.

இந்த உறுதிமொழிச் செய்தியை ஒப்பமிடும் ஆரம்ப வைபவம் ஜூன் மாதம் முதலாம் திகதி ஆரம்பிக்கப்பட உள்ளது. அறிஞர்கள், கல்விமான்கள், தனியார் நிறுவனங்களின் தலைமை நிர்வாகிகள், உயர் அரசாங்க அதிகாரிகள் அன்றைய தினம் உறுதிமொழிப் பத்திரத்தில் கையொப்பமிட்டு இந்த இயக்கத்தை ஆரம்பித்து வைப்பர்.

இதேவேளை பாடசாலைகள், மற்றும் சமூக சேவை நிறுவனங்களும் கிராம மட்டத்தில் உலகச் சூழல் தினத்தை இம்மாதம் 5 ஆம் திகதி கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றன. [அ-10]

## இன்று

தென்மராட்சி, மே 29

பளை வேம்பொடுகேணி கிராம சேவை அலுவலகர் பிரிவிலான சுகாதார விழா இன்று காலை 9 மணிக்கு இந்திராபுரம் மக்கள் சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறும்.

★ ★ ★

கொடிகாமம் கச்சாய் அரசினர் தமிழ் வித்தியாலய மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் இன்று இரவு 7 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும். (த)

## முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளர்

யாழ்ப்பாணம், மே 29

யாழ்ப்பாணக் கல்வித் திணைக்கள முகாமைத்துவ நிலையத்தின் உதவிக் கல்விப் பணிப்பாளராக கடமை ஆற்றி வந்த திரு. நாகமுத்து தணிகாசம்பிள்ளை கடந்த மாதம் முதல் பிரதிக்கல்விப் பணிப்பாளராக பதவி உயர்த்தப்பட்டுள்ளார். முதுகலைமாணியான இவர் தமது கலாநிதி பட்டப்படிப்பிற்காக "வடக்குப் பிரதேச கிராமப் பள்ளிக்கூடங்களின் அபிவிருத்தி சம்பந்தமான பிரச்சினைகள்" பற்றிய ஆராய்வை மேற்கொண்டு வருகிறார். [த]

## வருடாந்த பொங்கல் உற்சவம்

யாழ்ப்பாணம், மே 29

நல்லூர் வடக்கு அண்ணமார் கோவில் வருடாந்த பொங்கல் விழா நாளை சனி இரவு 8 மணிக்கு நடைபெறும்.

பொங்கல் வைபவத்தைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. [த-5]

## புளொட் உறுப்பினர் காயம்

கொழும்பு, மே 29

மட்டக்களப்பு மாவட்டத்தில் பழுகாமத்துக்கும் பட்டிருப்புக்கும் இடையே குருமண்வெளி என்னும் இடத்தில் விடுதலைப் புலிகள் நடத்திய கண்ணி வெடித் தாக்குதலில் படையினருக்கு உதவியாக சென்ற புளொட் உறுப்பினர் ஒருவர் படுகாயம் அடைந்தார்.

அந்த நபர் வைத்திய சிகிச்சைக்காக விமானம் மூலம் கொழும்புக்கு எடுத்துச் செல்லப்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கையில் அரச படையினருடன் புளொட், டெலோ உறுப்பினர்களும் உதவுவதாக கொழும்பில் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

# உலகச் செய்திகள்

## திரைப்பட நகருக்கு அடிக்கல்

சென்னை, தரமணியில் அமையவிருக்கும் திரைப்பட நகருக்கு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா நேற்று அடிக்கல் நட்டார்.

86 ஏக்கர் காணியில் இத் திரைப்பட நகர் கட்டப்படவிருக்கிறது. [இ-எ]

## அமெரிக்க—இந்திய கடற்படை ஒத்திகை ஆரம்பம்

அமெரிக்க — இந்திய யுத்தக் கப்பல்கள் கலந்து கொள்ளும் கூட்டுக் கடற்படை ஒத்திகை நேற்று அரபுக் கடலில் ஆரம்பமானது.

24 மணித்தியாலங்கள் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ள இந்த ஒத்திகையில் இந்தியாவின் ஐ. என். எஸ். கோமதி, ஐ. என். எஸ். ராஜ்கட் ஆகிய போர்க் கப்பல்களும்—

அமெரிக்க தரப்பில் ஏழாவது கடற்படையைச் சேர்ந்த சில கப்பல்களும் பங்கு பற்றின என்று அறிவிக்கப்படுகிறது. [ஒ-எ]

## வழக்குத் தொடர தீர்மானம்

ஹைதரபாத், மே 29

ஆந்திரா மாநிலத் தலைநகர் ஹைதரபாத்தில் நடந்து கொண்டிருக்கும் தெலுங்கு தேசம் கட்சியின் இரண்டாவது நாள் மாநாட்டின் போது ஆந்திர முதல்வர் ஜனார்த்தன் ரெட்டி மீது வழக்குத் தொடரவேண்டுமென தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## ராஜேஷ்மித்தல் டில்லி வந்தார்

பாகிஸ்தான் உளவுப் படையினரால் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டதாகக் கூறப்படும் இந்திய ராஜதந்திரி ராஜேஷ்மித்தல் இஸ்லாமபாத்தில் இருந்து இந்திய சிவில் விமானம் ஒன்றில் புதுடில்லிக்கு நேற்று அழைத்து வரப்பட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது. இ-எ]

# உதயன்

## தடுக்க வேண்டும்

ஈழத்தமிழர்களின் பிரச்சினையை அடுத்தவர்கள் — சிங்களத் தலைவர்கள், அரசுகள்; இந்தியத் தலைவர்கள், அரசுகள்; மேலைநாடுகள் தங்கள் நலன்களுக்குப் பயன்படுத்தி வருகிறார்கள் —

தமிழர் பிரச்சினை தோன்றிய காலத்தில் இருந்தே இது தொடர்கிறது. தமிழர் பிரச்சினையை மற்றவர்கள் தங்கள் கைகளில் எடுத்துக் கொண்டு, தமது நலன்களை நாடி செயற்படும்போது, தமிழர்கள் வேதனைகளையும், சோதனைகளையும் எதிர்கொள்ள வேண்டிய சோகமான நிலை நீடிக்கிறது —

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் அரசியல் ஆய்வாளரும் விமர்சகருமான திரு. மு திருநாவுக்கரசு.

தமிழர் பிரச்சினையையும், தமிழர்களையும் பகடைக்காய்களாக வைத்துச் சிங்களத் தலைவர்கள் தமது சொந்த அரசியல் லாபம் தேடுவது நெடுங்கதையாகவே உள்ளது. அதனாலேயே பிரச்சினை இன்னும் தீரவில்லை.

தாம் சிங்கள - பௌத்த தலைவர்களே என்று காட்டிக் கொண்டு தமது பதவிகளை நிலைப்படுத்துகிறார்கள். இன்னமும் அதே தந்திரத்தையே கையாளுகிறார்கள்.

தெரிவுக்குழு ஒன்றை நியமித்த பின்னரும், ஐக்கிய தேசியக் கட்சியோ அல்லது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியோ இனப்பிரச்சினைக்கான தமது சொந்தத் தீர்வு ஒன்றை முன்வைக்காமல் ஒளித்து விளையாடுவது அந்தத் தந்திரத்தின் ஓர் அம்சமே.

இந்தியாவைப் பொறுத்த வரையில், அது முற்று முழுதாகத் தனது சொந்த நலன்கள் நோக்கியே செயற்பட்டது; செயற்படுகிறது. 1987 ஒப்பந்தத்தின்படி இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் இந்தியாவின் பங்கு இன்னமும் உண்டு என்று கொழும்பில் இந்தியத் தூதுவர் திரு. ஜா தெரிவித்துள்ளதன் அர்த்தம் அதுவே. தமிழர் பிரச்சினையை மீண்டும் ஒருமுறை தான் பயன்படுத்துவதற்கான முயற்சிகளில் அது முனைப்பாக ஈடுபட்டிருக்கிறது.

அதனாலேயே இந்தியா தமிழர் பிரச்சினையைப் புலிகள் பிரச்சினையாக்கி வருகிறது. புலிகளை அழிப்பதன் மூலம் தமிழர் பிரச்சினைக்கு முடிவு கட்டி விடலாம் என்ற ஒரு மாயையை உருவாக்கி வருகிறது. ஏன், கொழும்பு அரசும் அதே தட்டில் தான் நின்று செயலாற்றுகிறது.

தென்னிலங்கைத் தலைவர்களைப் பொறுத்த வரையிலும், இந்தியத் தலைவர்களைப் பொறுத்த வரையிலும் தமது அரசியல் நோக்கங்களை அடைவதற்கு தமிழர் பிரச்சினையை ஓர் இலகு வழியாக ஆக்கிவிட்டார்கள்.

ஆகவே அவர்கள் ஈழத் தமிழர் பிரச்சினையைத் தீர்த்து வைக்க உள்மனதோடு செயலாற்ற மாட்டார்கள். இது விடயத்தில் தமிழர்களே மிகக் கவனமாக இருக்க வேண்டும்.

கவனமாகவும் சாதுரியமாகவும் ராஜதந்திரத்துடனும் செயலாற்றுவது மட்டுமன்றி, அணுகுமுறைகளை மாற்ற வேண்டிய தேவை கூட உருவாகலாம்.

ஆயினும் எந்த அணுகுமுறைகளும், மூலோபாயங்களும் தமிழர் பிரச்சினையை அடுத்தவர்கள் தங்கள் நலனுக்குப் பயன்படுத்துவதை தடுப்பனவாக அமைய வேண்டும். அதிலேயே தமிழர் வெற்றி தங்கி உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம் ஊர்காவலர்களே தமிழர்களைக் கொன்றனர்!

## விசாரணை அறிக்கை கையளிப்பு

கொழும்பு, மே 29

கடந்தமாதம் 29 ஆம் திகதி பொலன்னறுவ மாவட்டத்தில் தமிழ்க் கிராம வாசிகளை முஸ்லிம் ஊர்காவல் படையினரே கொலை செய்ததாக இச்சம்பவம் பற்றி விசாரணை நடத்திய நீதியரசர் ஜெயலத் தலைமையிலான விசேட குழு தெரிவித்தது.

ஜெயலத் குழு தனது அறிக்கையை பாதுகாப்பு அமைச்சு மற்றும் ஜனாதிபதியின் அலுவலகத்திடமும் கையளித்தது.

முஸ்லிம் ஊர்காவல் படையினர் கொலைகளை நடத்தியபோது பொலிஸார் வாளாவிருந்ததாகவும் குழு தெரிவித்துள்ளது.

முஸ்லிம் ஊர்காவல் படையினரால் கொல்லப்பட்ட தமிழ்க் கிராம வாசிகளின் எண்ணிக்கை 83 எனவும் இன்னும் பலர் காணாமற் போயிருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது.

இதுபற்றித் தெரிவித்த ஜனாதிபதி ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் தமிழ்க் கிராம வாசிகளைக் கொலை செய்த முஸ்லிம் ஊர்காவல் படையினரை அடையாளம் காணப்படுள்ளதாகக் கூறினார்.

எனினும் இந்த ஊர்காவல் படையினருக்குஎதிராகபொலீஸார் என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறார்கள் என்பது குறித்து அவர் ஏதும் கூறவில்லை.

அலிஞ்சிப்பொத்தானைக் கிராமத்தில் முஸ்லிம்கள் பலர் கொலை செய்யப்பட்டதற்கு பழிவாங்கும் நடவடிக்கையாகவே தமிழர்கள் வெட்டிக் கொலை செய்யப்பட்டனர் என்றும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[ஓ-எ-10]

## இந்திய விஜயம்

புதுடில்லி, மே 29

மொரிஷியஸ் ஜனாதிபதி வீராசாமி ரெங்காடு பத்து நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு நேற்று முன்தினம் பம்பாய் சென்றார்.

## இடைக்கால அறிக்கையை ஜெயலத் குழு கையளிப்பு

கொழும்பு, மே 29

முல்லைத்தீவு மாவட்டம் வற்றாப்பளை கண்ணகை அம்மன் கோவில் பொங்கல் விழாவின்போது இராணுவம் நடத்திய ஷெல் தாக்குதல் பற்றி விசாரணை நடத்திய நீதியரசர் ஜெயலத் தலைமையிலான விசாரணைக் குழு தனது இடைக்கால அறிக்கை ஒன்றை பாதுகாப்பு அமைச்சிடம் கையளித்தது.

"அந்தக் கோவிலில் வருடாந்த உற்சவம் நடந்து கொண்டிருந்தபோது சுமார் 200 பேர் கொண்ட தீவிரவாதிகள் குழு ஒன்று அந்தப் பகுதியில் கூடியிருந்ததை இராணுவத்தினர் அவதானித்தனர். அவர்களை நோக்கி நான்கு மோட்டார் ஷெல்கள் ஏவப்பட்டன.

கோவிலின் மீது இராணுவத்தினர் ஒருபோதும் ஷெல் தாக்குதல் நடத்தவில்லை"— என்று ஜனாதிபதியின் வெளியுறவு ஆலோசகர் பிரட்மன் வீரக்கூன் தெரிவித்தார்.

ஒரு மோட்டார் ஷெல் வீழ்ந்தபோது கோவில் பகுதியில் இருந்த பக்தர்கள் அதற்கு இலக்கானார்கள். பக்தர்களுடன் கலந்து இருந்த விடுதலைப் புலிகள் போராளி ஒருவரும் கொல்லப்பட்டார். கோவிலில் இருந்து 100 மீற்றர்களுக்கு அப்பால் ஷெல் வீழ்ந்தது.

இச் சம்பவம் பற்றிய இறுதி அறிக்கை பின்னர் வெளியிடப்படும் என்றும் திரு. பிரட்மன் வீரக்கூன் செய்தியாளரிடம் நேற்றுத் தெரிவித்தார்.

[ஓ-எ]

## படை முன்னேறும்...

[1 ஆம் பக்கத்தொடர்ச்சி]

களின் உக்கிர தாக்குதல்களினால் மீண்டும் வளலாய்க்கு விரட்டியடிக்கப்பட்டனர்.

அதேசமயம் வளலாய் கடற்கரை வீதிப்பக்கமாக வந்த படையினர் கடற்கரையோரத்தில் — புதுச்சந்திக்கு அருகே — முன்னேற முடியாமல் திரும்பியதாக அறியவந்தது.

### சுப்பர்சோனிக்கும் தாக்குதல்

இதேசமயம்—

நேற்றுக் காலை 6. 20 மணி முதல் வல்வெட்டித்துறை, பொலிகண்டி, தொண்டமனாறு பகுதிகள் மீது ஸ்ரீலங்காவின் முப்படைகளும் தாக்குதல்களை நடத்தின.

காலை 6. 20 மணியளவில் இரு "சுப்பர் சோனிக்" குண்டு வீச்சு விமானங்கள் மயிலியதனையில் குண்டுகளை வீசின. மூன்று பொம்மர்கள், அவ்ரோ விமானம் ஒன்று, சீ - பிளேன் ஒன்று, ஹெலிக்கொப்டர் ஒன்று ஆகியனவும் தாக்குதல்களை நடத்தின

கடற் குதியில் தரித்து நின்ற ஏழு விசைப் படகுகளில் இருந்தும் வடமராட்சியை நோக்கி பீரங்கித் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. அதே வேளை பலாலி முகாம் பகுதியிலிருந்து வடமராட்சியை நோக்கி அடுத்தடுத்து ஷெல்கள் ஏவிவிடப்பட்டன.

இந்தத் தாக்குதல்களினால் வடமராட்சியில் பத்துப் பொது மக்களும், பத்தமேனிப் பகுதியில் இருவரும் உயிரிழந்தனர். பலர் படுகாயமுற்றனர்.

### உடமைகளுக்கு பெருஞ் சேதம்

வடமராட்சியில் பொது மக்களின் உடைமைகளுக்கு பெரும் சேதம் ஏற்பட்டது. அவை பற்றிய விவரம் வருமாறு:-

★ உடுப்பிட்டியில் நேற்று இரண்டு விமானக் குண்டுகள் வீசப்பட்டன. எனினும் அங்கு தெய்வாதீனமாக உயிர்ச் சேதம் ஏதும் ஏற்படவில்லை. உடுப்பிட்டி மகளிர் கல்லூரியும் சில வீடுகளும் சேதமுற்றன.

★ நேற்றைய தாக்குதலில் பொலிகண்டி வீரபத்திரர் ஆலயம் முற்றாகச் சேதமானது.

★ பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான — பொலிகண்டியில் உள்ள — 18 ஆம் இலக்கக் கிளையும், 32 ஆம் இலக்கக் கிளையும் முற்றாகச் சேதமுற்றன.

★ பொலிகண்டி - சமரபாகு உபதபாற் கந்தோர் மற்றும் சில வர்த்தக நிலையங்கள், பொலிகண்டி பாரதி சனசமூக நிலையம் என்பனவும் பெரும் சேதமடைந்தன.

★ நெடியகாடு பிள்ளையார் கோவில் சிறிது சேதத்திற்குள்ளானது. கணபதிபடிப்பகம், வல்லவை மகளிர் வித்தியாலயம், அதற்குப் பின்னாலுள்ள இரு வீடுகள் என்பனவும் சேதமடைந்தன.

★ வல்வெட்டித்துறை மற்றும் மயிலியதனைப் பகுதியில் ஏராளமான வீடுகள் சேதமடைந்தன.

★ ஊறணி வைத்திய சாலைக்கு அருகில் விழுந்து வெடித்த ஷெல்லின் அதிர்ச்சியால் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டிருந்த 8 மாதக் குழந்தை ஒன்று மரணமானது.

[உ-165-118-15]

## மணலாறில்:..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தாக்குதல் இதுவாகும்.

இத்தாக்குதலின்போது படையினரிடமிருந்து புலிகள் கைப்பற்றிய ஆயுதங்களின் விவரம் வருமாறு:-

★ ரீ -56 ரகத் துப்பாக்கி — 2

★ அவற்றுக்கான மகஸீன்கள் — 7

★ நடுத்தர ரவைகள் — 1030

★ கிளைமோர்கள் — 3

★ ஜே. ஆர். கிரனேட்டுக்கள் — 5

★ மகஸின் தாங்கி அணி — 1

★ மழைக் கவச அணி — 3

★ சப்பாத்து — 4 சோடி

★ தலைக்கவசம் — 3

★ வயர் றோல்கள் — 3

[இ-5]

## காயமடைந்தோர்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

மு. செல்வலிங்கமூர்த்தி [வயது 15].

தொண்டமானாறைச் சேர்ந்தவர்களான த. தங்கக்கட்டி [வயது 36], எம். வள்ளிக்கொடி [வயது 44 — காட்டுப் புலம்], மற்றும் தேவசிகாமணி சந்திரகுமாரி [வயது 11 — அம்மன் கோவிலடி], சரவணமுத்து சுந்தரம் [வயது 60 — ஆதிகோவிலடி], அரியரத்தினம் மஞ்சுளாதேவி [வயது 23 — மயிலியதனை].

பத்தமேனிப் பகுதியில் இடம்பெற்ற சம்பவத்தில் பாரதி வீதியைச் சேர்ந்த வன்னியசிங்கம் அழகம்மா [வயது 55] என்ற வயோதிபப் பெண் காயமடைந்தார்.

[உ-165-118-15]

## உயிரிழந்தோர்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

★ வல்லிபுரம் சிவசம்பு [வயது 60 — பொலிகண்டி.]

★ எட்டு மாதப் பெண் குழந்தையான ஜெயவீரசிங்கம் மயூரி (வல்வட்டித்துறை)

★ எஸ். வீரச்செல்வன் (வயது 19 — வல்வெட்டித்துறை)

★ செல்வி எஸ். நாகலட்சுமி (வயது 29 — வேம்படி)

★ சின்னராசா (வயது 60 — ஆதி கோவிலடி.)

பத்தமேனி பகுதியில் இடம்பெற்ற சம்பவங்களில் உயிரிழந்த இருவரின் விவரம் வருமாறு:-

★ சத்தியசீலன் ராசன் (வயது 30 — பாரதி வீதி)

★ பொன்னுத்துரை அன்னலட்சுமி (வயது 60 — வருணன்)

(உ-165-118-15)

## இராணுவ...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கைப்பற்றும் எண்ணத்துடன் மேற்கொள்ளப்படவில்லை என்றும் அவர் கூறினார்.

யாழ்ப்பாணத்தில் படையினர் மேற்கொண்டுள்ள இராணுவ நடவடிக்கையில் ஐந்து இராணுவ முகாம்களைச் சேர்ந்த துருப்புகள் பங்குபற்றுவதாக கொழும்பில் இராணுவ வட்டாரங்களை மேற்கோள் காட்டி இந்திய வானொலி அறிவித்தது.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி பவானி ஜெய்சங்கர்

[ஆசிரியை - நாவலர் மகா வித்தியாலயம்]

திருமதி பவானி ஜெய்சங்கர் [ஆசிரியை நாவலர் மகாவித்தியாலயம்] 28 - 5 - 92 அன்று காலமானார். இவர் திரு. ம. ஜெய்சங்கர் (உரிமையாளர் - சங்கர் கராஜ், அப்பையா கடைச் சந்தி) அவர்களின் அன்பு மனைவியும், திரு. திருமதி சோதிலிங்கத்தின் அன்பு மகளும், திரு. திருமதி மகாலிங்கம் அவர்களின் அன்பு மருமகளும், அங்கயற்கண்ணி, பரந்தாமன் [ஜேர்மனி], ஆகியோரின் அன்புச் சகோதரியும் திரு. பொ. கயிலாசநாதனின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை [29 - 5 -92] 287, நாவலர் வீதி, ஆனைப்பந்தி இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் காலை 10 மணியளவில் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். தயவு செய்து நண்பர்களும், உறவினர்களும் இவ் அறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

287, நாவலர் வீதி,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
ந. சோதிலிங்கம்

## சிவகுரு சிவலிங்கம்

கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட சிவகுரு சிவலிங்கம் 23-05-1992 அன்று ஜேர்மனியில் காலமானார். அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி சிவகுருவின் அன்புப் புதல்வரும், கருணாவதியின் அன்புக் கணவரும், ஷிராந்தி, ஹிராந்தி, சிவசங்கர் ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

பொலீஸ் நிலைய வீதி,
சாவகச்சேரி.

தகவல்:
திருமதி கருணா சிவலிங்கம்.
[மனைவி]

[21173]

## திருமதி தெய்வானைப்பிள்ளை கனகசபை

அச்சுவேலி தெற்கைச் சேர்ந்த கனகசபை தெய்வானைப்பிள்ளை 28 - 5 - 92 காலமானார். இவர் காலஞ்சென்ற முருகேசு கனகசபையின் அன்பு மனைவியும் முருகேசு (Retired Assistant Trans Supdt (C G.R.) கே. கே. பிள்ளை (Retired Asst Comm of Police, Malaysia), மனோன்மணி துரையப்பா, சரஸ்வதி விமலச்சந்திரன் ஆகியோரின் தாயாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (29 - 5 - 92) அச்சுவேலி தெற்கில் பி. ப. 3. 30 மணிக்கு நடைபெறும். உற்றார், உறவினர் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி

(21176)

தகவல்:
க. முருகேசு
[மகன்]

## சங்கரப்பிள்ளை செல்லப்பா

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் தற்போது தெல்லிப்பழையை வசிப்பிடமாகக் கொண்டவருமான செல்லப்பா காலமாகிவிட்டார். இவர் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் செல்வகுமார், உதயகுமார் [சுவிஸ்], சுபாஜினி [சுவிஸ்], சுபந்தினி, விநோதினி ஆகியோரின் அன்புத் தந்தையாரும் உதயராணி, சத்தியேந்திரன் [சத்தி] ஆகியோரின் மாமனாரும், மாணிக்கம் நல்லதம்பி, கனகரத்தினம் [சிங்கப்பூர்], காலஞ்சென்றவர்களான வெள்ளைத்தம்பி, (கந்தையா - சிங்கப்பூர்), ஆச்சிக்குட்டி, கந்தையா (அத்தி) ஆகியோரின் சகோதரரும் சுந்தரலிங்கத்தின் மைத்துனரும், நர்மதா, பிரதீபா, சிவானுசாந்தன், ஷங்கீரன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் வெள்ளிக்கிழமை [29-5-92] நண்பகல் 2 மணியளவில் மல்லாகம் கட்டுப்பிட்டி மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

ஒவசியர் லேன்,
தெல்லிப்பழை.

தகவல்:
செ. நாகேஸ்வரி
[மனைவி]

[21177]

எடிசன்
அக்கடமி
(யாழ். இந்து அருகில்)
K K.S. Road, JAFFNA.
ஆண்டு 10, 11
O/L
DAY CLASS
புதிய 2வது பிரிவுகள்
ஆரம்பம்
30–05–92 சனி 7. 30
கணிதம்;
பாஸ்கரன்
[யாழ். பல்கலைக்கழகம்]
விஞ்ஞானம்:
J. R. தூரி, J. J. கொலின்ஸ்
[4704]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 292/3 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 29 - 05 - 1992 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org